14 FEB 2000

பக்கங்கள் ஆறு

வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 02 திங்கட்கிழமை (14 - 02 - 2000) VALAMPURI ஒலி: 57

★ மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்:

ஜனாதிபதியும், ரணிலும் இணைந்து நோர்வே அரசிடம் கோர வேண்டும்!

தமிழ் எம். பிக்கள் வேண்டுகோள்

(கொழும்பு)

"இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுடனும், எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேச்சுக்கள் நடத்தவரும் நோர்வே வெளிநாட்டமைச்சர் கெனட் வொலி பேக்கிடம் இனப்பிரச்சினை தீர்வுக்கு 3ம் தரப்பாக மத்தியஸ்தம் வகிக்க வேண்டுமென்ற கோரிக்கையை அரசும் எதிர்க்கட்சியும் விடுக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ் அரசியல் கட்சிஜனாதிபதியிடமும்எதிர் கட்சித் தலைவரிடமும் வேண்டுகோள்விடுத்தனர்.

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட எம்.பி.யுமானடக்ளஸ்தேவானந்தா. வி. கூட்டணிதேசியப்பட்டியல் எம். பி. மாவை சேனதிராசா ரெலோ எம். பி.அடைக்கலநாதன்செல்வம் இ.தொகா.எம்.பிர். யோகராஜா ஆகியோ இவ்வேண்டுகோள்விடுத்துள்ளனர்.(வ)

பிரதியமைச்சரின் பஜிரோ மோதி தந்தையும் மகனும் ஸ்தலத்தில் பலி!

[கொழும்பு]

பிரதியமைச்சர் ஒருவரின் பஜிரோ வாகனம் மோட்டார் சைக்கிளில் வந்த தந்தையும் மகனையும் மோதியதில் இருவரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

இவ்விபத்து வெள்ளவத்தை மாயா அவென்யுவில் வெள்ளி இரவு நடைபெற்றதாக தெரியவந்துள்ளது,

இச்சம்பவத்தில் முகத்துவாரத்தைச் சேர்ந்த இராமையா சுப்பிரமணியம், சுப்பிரமணியம் சைலேந்திரா ஆகிய இருவருமே (தந்தையும் மகனும்) கொல்லப்பட்டவர்களாவர்,

இவ்விபத்து சம்பவம் சம்பந்தமாக தெரியவருவதாவது மோட்டார் சைக்கிளில் வந்த தந்தையும் தனயனும் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு நின்றசமயமே பிரதியமைச்சரின் பஜிரோ வந்து மோதியதாக கூறப்படுகின்றது [6ஆம் பக்கம் பார்க்க]

இலங்கை இனப்பிரச்சினை விவகாரம்

நோர்வே வெளிவிவகார அமைச்சர் அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சு!

அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் அடுத்த மாதம் ஐ.தே.க.வுடன் பேச்சு

டி. எம். ஜயரத்தின தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் சுமுகமான முறையில் நடைபெற்றுவருவதாக பொதுஜன (6 ஆம் பக்கம் பார்க்க)

ஈ. பி. டி. பியின் முயற்சியால்

அனலைதீவு வடக்கு இறங்குதுறை இன்று முதல் போ. வ. அனுமதி

(யாழ்ப்பாணம்)

அனலைதீவில் கடந்த ஒன்பது வருடங்களாகப் போக்குவரத்துப் பாவணைக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்த வடக்குஇறங்குதுறையைமீண்டும் இன்று முதல் பயன்படுத்துவதற்கு கடற்படை அனுமதித்துள்ளது. (6 ஆம் பக்கம் பார்க்க)

பெற்றசிசுவை பிறந்தவுடன் கொலைசெய்து வாழைத்தோட்டத்தில் புதைத்ததாய் கைது

(வவுனியா)

தான்பெற்ற சிசுவை பிறந்தவுடன் கொலைசெய்து வாழைமரத்தடியில் புதைத்ததாய் ஒருவரை வவுனியா பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

வவுனியா மதவு வைத்தகுளம் தங்கநகரில் வசிக்கும் (6 ஆம் பக்கம் பார்க்க)

பதினைந்து யுத்தக் கைதிகள் தம்மை விடுவிக்கக்கோரி உண்ணாவிரதம்

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலிருந்து 15 யுத்தக் கைதிகள் தம்மை விடுதலை செய்யக் கோரியும் அரசாங்கம் தம்மை விடுவிக்க ஆக்கபூர்வ நடவடிக்கை எடுக்கக் கோரியும் கடந்த 10ம் திகதி வியாழன் காலை முதல் சாகும் வரையான உண்ணாவிரதத்தை வன்னியில் ஆரம்பித்துள்ளனர். (6 ஆம் பக்கம் பார்க்க)

புதனன்று ஜனாதிபதியை சந்திப்பார்

(லண்டன்)

இனப்பிரச்சினை தொடர்பாக நோர்வே வெளிவிவகார அமைச்சர் கெனட் வொலிபேர்க் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பலசிங்கத்துடன் இரண்டுமணித்தியாலங்கள் நடாத்திய பேச்சு வார்த்தைகள் அரசையும் விடுதலைப் புலிகளையும் பேச்சு வார்த்தை மேசைக்கு கொண்டுவர ஏதுவாக அமையலாம் எனவும்;

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவையும் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் எதிர்வரும் புதன்கிழமை சந்திக்கும் பொழுது விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை எடுத்துக் கூறுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை இனப்பிரச்சினையில் சமாதான சூழ்நிலையை ஏற்படுத்துவது தொடர்பாக ஆராய்வதற்கு இலங்கை வரவிருக்கும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் கெனட் வொலி பேர்க் லண்டனில் தமிழீழவிடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்துப் பேசியுள்ளார்.

இப்பேச்சு வார்த்தை நேற்று முன்தினம் சனிக்கிழமை இரண்டு மணித்தியாலங்கள் வரை இடம்பெற்றது.

இந்தப் பேச்சு வார்த்தையின் போது அரசியல் ஆலோ (6 ஆம் பக்கம் பார்க்க)

உடுவிலில் கிரனேட் வெடித்ததில் குடும்பப்பெண் மரணம் மகன் படுகாயம்!

[நீராவியடி]

கிரனேட் ஒன்று வெடித்ததில் உடுவிலைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் பலியாகியுள்ளார்.

நேற்றுமுன்தினமிரவு நடைபெற்ற மேற்படி சம்பவத்தில் (6 ஆம் பக்கம் பார்க்க)

வரவு செலவுத் திட்டம்

தமிழர் விடுதலைக்கூட்டனி, ரெலோ எம்.பிக்கள் எதிர்த்து வாக்களிப்பர்!

(கொழும்பு)

இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் பொ. ஐ. ஐ. முன்னணி அரசின் 2 ஆம் கட்டத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவினங்களுக்கு கூடுதலான பணம் செலவு செய்யப்படவிருப்பதை காரணம் காட்டி தமிழர் விடுதலைக் கூட்டணி (6 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

ஒரு பிரதேசத்தின் முன்னேற்றம்

அங்குள்ள பாலர் பாடசாலைகளின் செயற்பாட்டில் தங்கி உள்ளது

தென்மராட்சி பிர. செயலர் தெரிவிப்பு

[மந்துவில்]

ஒரு பிரதேசத்தின் முன்னேற்றம் அங்குள்ள பாலர் பாடசாலைகளின் தொகையிலும் அவற்றின் புத்தூக்கமான செயற்பாட்டிலுமே தங்கியுள்ளது. என்பதற்கு தென்மராட்சிப் பிரதேசத்தை நல்லதோர் முன்னுதாரணமாகக் கொள்ளலாம்.

தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை மந்துவில் வடக்கு பாலர் பாடசாலையை திறந்து வைத்து உரையாற்றுகையில் மேற் கண்டவாறு கூறினார்.

1999ஆம் ஆண்டு பன்முகப் படுத்தப்பட்ட நிதியில் இருந்து அமைக்கப்பட்ட மந்துவில் பாலர் பாடசாலை திறப்பு விழா சென்ற 11ஆம் திகதி சி. இராஜகுலசிங்கம் தலைமையில் நடை பெற்றது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி பிரதேச செயலர் மேலும் கூறியதாவது;

பல்கலைக்கழக மாணவரின் மகாபொல கொடுப்பனவு ஆரம்ப நிகழ்ச்சியில் கலந்து கொள்ள சென்ற போது அங்கு வருகை தந்திருந்த பல்கலைக்கழக மாணவர்களில் அனேகர் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ந்தேன்.

இப்படியான கல்விச் சமூகத்தினை உருவாக்குவதில் ஆரம்ப பங்களிப்பு செய்வது இது போன்ற பாலர் பாடசாலைகளே என்பதை யாரும் மறந்துவிடலாகாது.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு, சரியான அரசின் வழி நடத்தல்கள் எதுவும் இற்றைவரை கிடையாது என்பது மனம் வருந்துதற்குரியது. அவர்களுக்கு திட்டமிட்டு நல்ல பயிற்சியை உரிய முறையில் அரசு வழங்குமானால், எதிர் காலத்தில் நல்ல பிரஜைகளை, நாடுபோற்றக் கூடியவர்களை, நாம் உருவாக்க முடியும் என்பது திண்ணம் என்றார்.

இந்நிகழ்வில், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேசசபைத் செயலாளர் பாலச்சந்திரன் உட்பட பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர். (க-39)

அடிக்கல் நாட்டல்

(அச்சுவேலி)

புத்தூர் வளர்மதி சனசமூக நிலைய மற்றும் முன்பள்ளிக் குமான அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நிலையத் தலைவர் சி. சிவேந்திரராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஈ.பி.டி.பி. யின் கோப்பாய் பிரிவு அமைப்பாளர் ரவி அடிக்கல்லை நாட்டிவைத்தார். (க-57)

உற்சவம் ஆரம்பம்

[கல்வியங்காடு]

கல்வியங்காடு ஆடியபாதம் வீதியில் இருக்கும் ஸ்ரீராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 10ஆம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 10தினங்கள் இவ் உற்சவம் இடம்பெறும். [க-54]

புகையிலையில் குருமன் நோய்

(அச்சுவேலி)

சிறுப்பிட்டி, நவக்கிரி நிலாவரை, நீர்வேலி, புன்னாலைக்கட்டுவன், உரும்பிராய் ஆகிய இடங்களில் புகையிலைக் கன்றுகளில் குருமன் நோய்' மற்றும் அழுக்கணவன் நோய்த்தாக்கமும் அதிகரித்திருப்பதாக புகையிலைச் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (க-57)

இராசி பலன்

14. 02. 2000

திங்கட்கிழமை

(தமிழுக்கு மாசி 02)

நவமி நண்பகல் 11.55; ரோகினி மாலை 7.28 வரை, அமிர்த சித்தயோகம் இராகு காலம் 8.54 முதல் 10.02 வரை, சுபநேரம் நண்பகல் 10.02 முதல் 2.32 வரை,

மேடம்:
கடினவாக்கு, வாக்குக்கலகம். மனச்சுமை.

இடபம்:
பிறர் தயவு, தொழில் நிதானம், நண்பர் உதவி.

மிதுனம்:
பயந்த சுபாபம், மனக்கிலேசம், குழப்பநிலை.

கடகம்:
எதிரிகள் நட்பு, காரிய சித்தி. தாயார் அறிவுரை,

சிங்கம்:
தொழில் லாபம், கடமை உணர்வு, சயன சுகம்.

கன்னி:
போட்டி உருவாகல், அதிகாரிகள் வெறுப்பு, கடன் சுமை.

துலாம்:
முட்டுக்கட்டை, குடும்ப வேற்றுமை, அலைச்சல்.

விருச்சிகம்:
சுபகாரியம். வீட்டில் கலகலப்பு, அயலவர் உதவி

தனுசு:
வாய்ப்பு வசதி, வெளி நாட்டு தொடர்பு, தெய்வ தரிசனம்.

மகரம்:
தந்திரோபாயம், சகோதர விரோதம், உடல் உபாதை.

கும்பம்:
குற்ற உணர்வு, தடுமாற்றம், பொருள் நஷ்டம்.

மீனம்:
சிந்தை தெளிவு, கல்வியில் பெருமை. கற்பனை.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

வீதி புனரமைப்பு

நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் இருந்துவந்த வல்லை சிவகுரு வித்தியாலய வீதி தற்போது வல்வெட்டித்துறை நகரபிதா எஸ். சிவாஜிலிங்கம் பணிப்பின்பேரில் புனரமைக்கப்பட்டுள்ளது.

தொல்புரம் பகுதியில் ஓலைக் குடிசை பட்டப்பகலில் தீக்கிரையாக்கப்பட்டது

வலி. மே. பி. தலைவர் முறையீடு

(நல்லூர்)

தொல்புரம் கிழக்கைச் சேர்ந்த தேவராசா என்பவருடைய ஓலைக்குடிசை பட்டப்பகல் வேளை தீக்கிரையாக்கப்பட்டதில் வீடு முற்றாக எரிந்து சாம்பலானது. வீட்டிலிருந்த பொருள்கள் யாவும் சேதமடைந்துள்ளன.

வீட்டில் உள்ளோர் அயல் ஊரில் திருமண வீடு ஒன்றிற்கு சென்ற வேளையிலேயே இத் துகைய நாசகாரச் செயல் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் குறித்து வலி, மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருலோகநாதனிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவர் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் நடவடிக்கையில் உடனடியாக ஈடுபட்டுள்ளனர்.

இச் சம்பவம் குறித்து சுன்னாகம் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

களுத்துறை சிறைச் சாலையில்

தமது பிள்ளைகளை பார்வையிட செல்லும் பெற்றோருக்கு இடைஞ்சல் ஏற்படமாட்டாது

ஆணையாளர் உறுதி

(கொழும்பு)

களுத்துறைச் சிறையில் வாடும் தமது பிள்ளைகளைப் பார்வையிடச்செல்லும் பெற்றோர் அனுபவித்து வரும் இடைஞ்சல்கள் இனி வரும் காலங்களில் தவிர்க்கப்படும் என சிறைச்சாலை ஆணையாளர் உறுதியளித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு—கிழக்கு பொது அரசியல் கைதிகளாக களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது பிள்ளைகளைப் பார்வையிடச் செல்லும் பெற்றோர் சோதனை என்ற பெயரில் தாம் அனுபவிக்கும் இடைஞ்சல்களையும்—

தம் பிள்ளைகளுக்குக் கொண்டு செல்கின்ற உணவுப் பொருட்களை சோதனையிடும் போது சுகாதாரப் பழக்க வழக்கங்களை சிறைச் சாலை உத்தியோகத்தர் கைக்கொள்ளாமை தொடர்பாகவும் மேற்படி பெற்றோர் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசாவின் சுவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

இதனையடுத்து பொன் செல்வராசா சிறைச்சாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக் கொண்டதற்கமையவே சிறைச்சாலை ஆணையாளர் மேற்படி உறுதிமொழியை வழங்கி இருப்பதாக தெரியவருகிறது.

வடக்கு-கிழக்கை சேர்ந்தச் பெருமளவு தமிழ் இளைஞர்கள் களுத்துறை சிறையில் வைக்கப்பட்டுள்ளமை ஏற்கனவே தெரிந்ததே. [க-9]

பஸ்கட்டண அதிகரிப்பு

கண் காணிக்க புதிய குழு நியமிக்கப்படும் மத்திய போக்குவரத்து சபை தெரிவிப்பு

(கொழும்பு)

அதிகரிக்கப்பட்ட பஸ் கட்டணம் சரியான முறையில் அறவிடப்படுகின்றதா என்பதை அவதானிக்க புதிய குழு ஒன்றை நியமிக்கப் போவதாக மத்திய போக்குவரத்துச்சபை தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் தொடக்கம் மக்கள் மயப்படுத்தப்பட்ட மற்றும் கொத்தணி பஸ் கம்பனிகளுக்கு சொந்தமான பஸ் பிரயாணக் கட்டணம் 15 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தனியார் பஸ் கட்டணத்தின் அறவீடுகளும், கொத்தணி பஸ் கம்பனிகளின் அறவீடுகளும் ஏற்றத்தாழ்வு இன்றி சமனான கட்டணத்துக்கு வந்துள்ளன.

புதிய கட்டண அறவீடுகள் சரியான முறையில் அறவிடப்படுகின்றனவா என்பதை இந்தக் குழுவினர் இன்று திங்கட்கிழமை முதல் நாடளாவிய ரீதியில் கண்காணிப்பார்கள் என மத்திய போக்குவரத்து சபையின் தலைவர் ரமால் சிறிவர்த்தன தெரிவித்திருக்கின்றார். (க)

14வயது மாணவியை முச்சக்கரவண்டியில் கடத்திய இளைஞன் விளக்கமறியலில்

(மட்டக்களப்பு)

14 வயதுப் பெண்ணை முச்சக்கர வண்டியில் கடத்திச் சென்றதாக நம்பப்படும் 21 வயது வாலிபனை எதிர்வரும் 15ம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்கு மாறுமட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி கா. தட்சணாமூர்த்தி உத்தரவிட்டுள்ளார்.

மட்டக்களப்பு கல்லடியில் ரியூசனுக்குச் சென்ற 14வயது டைய சுபாஜினி என்ற 10ம் ஆண்டு மாணவியை உதயபாஸ்கர் என்பவர் காதலிப்பதாகத் தெரிய வருகிறது. சொந்த விருப்பத்தின் பேரிலேயே மேற்படி மாணவி ஆட்டோவில் வாலிபனுடன் சென்றுள்ளதாகத் தெரிவிக்கிறார் ஆனால் வயது பராயமடையாதகாரணத்தினால் மேற்படி வாலிபனைக் காத்தான்குடி பொலிஸார் கைது செய்தனர்

மேற்படி மாணவி மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் மேலதிக பரிசோதனைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார். (க-60)

யாழ்.பல்கலை ஆய்வுப்பட்டறையின் முக்கியம் பற்றி ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் கடந்த 12 ஆம் திகதி பிரிட்டிஷ், கொலம்பிய பல்கலைக் கழகம் இணைந்து நடாத்திய ''வட இலங்கைக்கான புனரமைப்பு மீள் அபிவிருத்தி'' தொடர்பாக ஆய்வுப்பட்டறையின்போது யாழ்.மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் நிகழ்த்திய தொடக்கவுரையின் முக்கிய பகுதிகள் இங்கு தரப்படுகின்றது.

இந்த ஆய்வுப் பட்டறை கிழ்வரும் காரணங்களால் முக்கியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

அவையாவன:-

1) ஆழ்ந்த அறிவும் அனுபவமும் வாய்ந்த கல்விமான்களும், துறைசார் நிபுணர்களும் கலந்துகொண்ட இவ் ஆய்வுப் பட்டறையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் தரம் உயர்ந்ததாக இருக்கும்.

2) உள்ளூர் வளங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.

3) கனடிய பல்கலைக்கழகமும் சம்பந்தப்பட்டுள்ளதால் சர்வதேச ரீதியில் வடபகுதி புனரமைப்பு தொடர்பான தகவல்களை வழங்கி உதவிகளை ஊக்குவிக்க ஒருவாய்ப்பும் இருக்கிறது.

4) பல்வேறு வகைப்பட்ட துறைகளிலே புரிந்துணர்வையும் ஒத்துழைப்பையும்வளர்க்கத்தக்கதாக இருக்கும்.

5) எதிர்காலத்தில் மீள் புனரமைப்பு பணிகளில் அத்தியாவசிய ஆவணங்களை ஒன்றுபடுத்துவதாகவும்அமையும்.

அர்த்தபுஷ்டியான புனரமைப்புப் பணிகளைச் செயற்படுத்துவதற்கு நிரந்தரமான சமாதானம் ஏற்படவேண்டும் என்பதை நீங்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்வீர்கள். மிக மிக விருப்பப்பட்ட போதிலும் தூரதிஷ்டவசமாக இது சாத்தியப்படாத நிலையிலேயே தொடர்ந்தும் இருக்கின்றது.

புனரமைப்பு என்பதில் பொதுவாக சேதமடைந்த நகரங்களையும் குடியிருப்புக்களையும் மீள அமைத்தல் என்ற சிந்தனைமுழுக்கமுழுக்கச் சரியானது அல்ல. அதற்கு மேல் ஒட்டுமொத்தமாக பொருளாதார, சமூக மன இயல் ரீதியான பல அம்சங்களை உள்ளடக்கியதாக அமையவேண்டும்.

புனருத்தாரணப்பணிகளில் பொதுமக்கள் பங்குபற்றுவதற்கான மனநிலை ஏற்படுத்தப்பட வேண்டியதும் முக்கியமான ஒரு கருதுகோளாகும்.

எம் இளைஞர் மத்தியில் நிலவுகின்ற வேலையில்லாப் பிரச்சினையை தீர்ப்பதற்கான நடவடிக்கைக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாண நகரம்கடந்த யுத்தத்தினால் பாரதூரமாகப் பாதிப்பட்டிருக்கின்றது. அதனை மீளச் சீரமைக்கும் பணிகள் மிக மெதுவாகவே நடந்து கொண்டிருக்கின்றன. யாழ்.மாநகர சபைப் பிரதேசத்தில் ஒரு காலத்தில் வாழ்ந்த வசதியுள்ள மக்களில் பெரும் பகுதியினர் இடம்பெயர்ந்து விட்டமையினாலும், மிகச்சாதாரணமான அளவிலேயே தொழிற் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதாலும் ஒரு யுத்தத்தினால் பாதிக்கபட்ட இந்த நகரத்தை சீரமைக்கக்கூடிய வளத்தினை வரிகள் மூலம் மாநகரசபை தேடமுடியாது. ஆகவேஎமக்கு அரசாங்கத்திடமிருந்தும் அபிவிருத்திக்கு உதவக்கூடிய சர்வதேசநிறுவனங்களிடமிருந்தும் பெருமளவில் உதவிகள் தேவைப்படுகின்றன என்றார்.

வீடுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு

கூரைத்தகடுகள் வழங்குவதற்கு யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் நடவடிக்கை

(வட்டுக்கோட்டை)

மீளக்குடியமர்ந்த மற்றும் சொந்த இடங்களுக்குத் திரும்பமுடியாத வீடுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு கூரைத் தகடுகள் வழங்க யு.என். எச். சி. ஆர். நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்பவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான கூரைத் தகடுகள் வழங்கப்படவுள்ளதாகவும் இதற்கான விபரங்களைப் பெற்றுத்தருமாறு யாழ். செயலகத்தைக்கேட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

(க-24)

சுய முயற்சிக் கடனாக

சர்வோதய இயக்கத்தினர் 200 பேருக்கு 9இலட்சத்து66 ஆயிரம்கடன் வழங்கினர்

(தென்மராட்சி)

யாழ்.மாவட்ட சர்வோதய இயக்கம் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் அவுஸ்திரேலியா உதவித் திட்டத்தின் அடிப்படையில் 200 பேருக்கு சுயதொழில் கடனாக 9இலட்சத்து66 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளது.

இதில் 72 பேருக்கு கோழி வளர்ப்புத் திட்டத்துக்கும் மரக்கறிச் செய்கைக்கு 74 பேருக்கும்,உடைகள் தைத்தலுக்கு 9 பேருக்கும்,சிறுகைத் தொழில் திட்டத்துக்கு 18 பேருக்கும் சிறுவியாபாரத்துக்கு 10 பேருக்கும், விலங்கு வேளாண்மைக்கு 11 பேருக்கும் கடன் வழங்கப்பட்டுள்ளதாக சர்வோதயஇயக்கத்தின் செயல் திட்டப் பணிப்பாளர் எஸ். வி. சங்கரப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

அத்துடன் முன்பள்ளித் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் 30 முன்பள்ளிகளுக்கான நிரந்தரகட்டடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

(க-77)

பயிற்சி நெறிகள்

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகப் பிரிவில் உள்ள 6 பாடசாலைகளில் சிறுவர் செயற்திட்ட விசேட பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை வடமராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

(க-52)

நீதியுடனும் சமத்துவத்துடனும் கூடிய சமாதானமே இன்று தேவை

திருமறைக் கலாமன்ற இயக்குநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நீதியுடனும், சமத்துவத்துடனும் சகோதரத்துடனும் கூடிய சமாதானமே இலங்கைக்கு தேவை இதனையே நாம் வேண்டி நிற்கிறோம்.

கலைப்பாலம் 2000 ஊடாக ஐரோப்பிய பயணம் மேற்கொண்டுள்ள திருமறைக்கலாமன்ற இயக்குநர் நீ. மரியசேவியர் அடிகளார், பாரிசில் இம்மாதம் 9 ஆம் திகதி நடைபெற்ற நடன நிகழ்வின் பாராட்டு விழாவில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல பிரெஞ்சு நாட்டு மக்களும், சிங்கள தமிழ் மக்களும், சமயத் தலைவர்கள் உட்பட பல நிறுவனத் தலைவர்களும், பல்கலைக்கழக பேராசிரியர்களும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் நீ. மரியசேவியர் அடிகளார் மேலும் தெரிவித்தாவது:-

இம்மேடை நிகழ்வுகளை வெறும்பொழுதுபோக்கு அம்சமாக கருதாமல்சமாதானப் பிரார்த்தனையாக இதனைக் கொள்ளும்படி இங்கு இருக்கின்ற அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்நடனக் குழுவினர்க்கு பலரும் பலவிதமான பாராட்டுதல்களையும் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் முன்வைத்ததையிட்டு நான் மகிழ்வடைகிறேன். இப்பாராட்டுதல்கள் எமது மண்ணுக்குக்கிடைத்த பெருமையாக எண்ணி மனநிறைவடைகிறேன் எனவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் பிரான்சிற்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் சேனக்க பண்டாரநாயக்க உட்பட மற்றும் பல பிரான்ஸ் நாட்டுப் பிரமுகர்கள் உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (க-9)

கடற்றொழிலாளர் 167 பேரின் படகுகள், வலைகள் நீரில் மூழ்கின

கோயிலாக் கண்டியில் சம்பவம்

(தென்மராட்சி)

கோயிலாக்கண்டி கடற்கரையில் 167 மீனவர்களின் பெறுமதிமிக்க மீன்பிடி வலைகளும், வள்ளங்களும் நீரில் மூழ்கிய நிலையில் இருப்பதாக அப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வலிகாமம் பகுதியில் தங்கியிருக்கும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக இப்பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மீன்பிடி உபகரணங்கள் இல்லாமையினால் வேறு இடங்களுக்குச் சென்று தம் தொழிலைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தொழில் இல்லாமையினால் இப்பகுதிக் கடற் றொழிலாளர் குடும்பங்கள் பல்வேறு விதமான பிரச்சனைகளையும்– சிரமங்களையும் எதிர் கொண்டு வாழ்ந்து வருகின்றனர் எனத் தெரிய வருகின்றது. (க-77)

கருத்தரங்கு

(தம்பலகாமம்)

தேசிய சமாதானப் பேரவை உலக வங்கியின் ஆதரவுடன் பத்திரிகையாளர்களுக்கான இருநாள் கருத்தரங்கு ஒன்று மொறட்டுவவில் உள்ள றன்மெல்ஹோட்டலில் இடம்பெற்றது. (க)

இந்திய முன்னாள் பிரதமர்கள்

தமது பயண பாக்கியை செலுத்தவும் புதுடில்லி உயர்நீதிமன்றம் உத்தரவு

(புதுடில்லி)

இத்தியாவின் முன்னாள் பிரதமர்கள் தமது பதவிக் காலத்தின் போது தமது சொந்த தேவைக்காக பயன்படுத்திய விமான பயணங்களிற்கானபாக்கிப் பணத்தை செலுத்துமாறு புதுடில்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பிரதமர்கள் நரசிம்மராவ், சந்திரசேகர், தேவகௌடா, முன்னாள் பாதுகாப்புத்துறை அமைச்சர் மலாயன் சிங்யாதவ் ஆகியோரது விமானப் பாக்கிகளை வசூலிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மேற்படி நீதிமன்றம் விடுத்துள்ள உத்தரவில் தெரிவித்துள்ளது.

இந்த வகையில் முன்னாள் இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் விமானம் பயண பாக்கித் தொகையான 5.52 கோடி ரூபாவை செலுத்துவதற்கான இறுதித் திகதியாக மார்ச் 31 வரை டில்லி உயர்நீதிமன்றம் அவகாசம் வழங்கி உள்ளது.

இவ்வாறே முன்னாள் பிரதமர்கள் சந்திரசேகர் 5.92 கோடி ரூபாவும். தேவ கௌடா 26.46 லட்ச ரூபாவும் செலுத்துவதற்கான அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவர்களை எல்லாம் மிஞ்சும் அளவுக்கு முன்னாள் பாதுகாப்புத்துறை அமைச்சர் மலாயன் சிங் 41.57 கோடி ரூபாய்கள் விமானப் பயண பாக்கித் தொகையாக செலுத்த வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-9)

அல்ஜீரிய போராளிகள் குழுவின் தாக்குதலில் 14 பேர் பலியாகினர்

(அல்ஜீயர்ஸ்)

அல்ஜீரிய முஸ்லிம் போராளிகள் குழுவான ஜி. ஐ. ஏ. பதுங்கி இருந்து தாக்கியதில் 14 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 6 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

பொதுமக்கள் போக்குவரத்துச் செய்கின்ற பிரதான சாலைகளில் பதுங்கி இருந்து மேற்கொண்ட தாக்குதல் சம்பவங்களிலேயே இவர்கள் கொல்லப்பட்டதாக தெரியவருகிறது,

பதுங்கி இருந்து திடீரெனத் தாக்கிவிட்டு மின்னல் வேகத்தில் இவர்கள் மறைந்து விடுவதனால் கண்டு பிடித்து தண்டனை வழங்குவது இயலாத காரியமாய் இருப்பதாகவும் இப்படியான தாக்குதல் சம்பவங்களில் கடந்த 3வருட காலங்களில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டு இருப்பதாகவும் 8 வருடங்களில் இலட்சக்கணக்கானோர் கொல்லப்பட்டிருப்பதாக அல்ஜீரிய பத்திரிகைச் செய்தி ஒன்று குறிப்பிட்டு உள்ளது.

இதேவேளை—

அப்பாவிப் பொதுமக்களை வீணே கொன்றொழிக்கின்ற இந்த குழுவினரை எப்படியும் அழித்தே தீருவேன் என அல்ஜீரிய ஜனாதிபதி அப்படில்லாஜிஸ் பலர்ஓப்ரிக்கா சூளுரைத்துள்ளார். [க-9]

முத்தரப்பு பேச்சுவார்த்தையிலிருந்து இஸ்ரேல் அரசு வாபஸ் பெற்றது

(பெய்ரூட்)

இஸ்ரேல்,லெபனான், சிரிய அரச அதிகாரிகள் சர்வதேச மேற்பார்வையாளர் முன்னிலையில் நட்ராத்திவந்த பேச்சுவார்த்தைகளினின்றும் விலகிக்கொள்வதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

லெபனான் படைகளின் தாக்குதலில் ஒரு இஸ்ரேல் படைவீரர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே இஸ்ரேல் இவ் அறிவிப்பை வெளியிட்டிருக்கலாம் என சர்வதேச அரசியல் நோக்கர்கள்கருத்து வெளியிட்டுள்ளனர்.

எனினும் இஸ்ரேல் இராணுவ அதிகாரிகள் இவை பற்றிய தகவல்களை வெளியிட தடை விதித்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

இஸ்ரேல் இராணுவ நிலைகள் மீது லெபனான் படையினர் மோட்டார் மற்றும் எறிகணைத் தாக்குதல்களை நடாத்தியதாக லெபனான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்குபதிலடி கொடுக்கும் முகமாக இஸ்ரேல் படையினரும் தாக்குதல்களில் ஈடுபட்டதைத் தொடர்ந்து அங்கு பதற்றம் அதிகரித்துள்ளது.

கடந்த இரு வார தாக்குதல் சம்பவங்களில் 7 இஸ்ரேலிய படைவீரர் கொல்லப்பட்டுள்ளனர். 15 லெபனான் படைவீரர்கள் படுகாயம் அடைந்துள்ளனர்.

(க-9)

உலக வலம்

பீகார்மணிப்பூர் சட்டப்பேரவை வாக்களிப்புகள் ஆரம்பமாகின

(புதுடில்லி)

பீகார், மணிப்பூர் சட்டப் பேரவைத் தேர்தல் வாக்களிப்புக்கள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் மற்றும் மோசமான காலநிலை என்பவற்றைப் பொருட்படுத்தாமல் மக்கள் வாக்களிப்பதற்காக நீண்ட வரிசைகளில் நிற்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இரண்டு மாநிலங்களிலும் ஏழு இலட்சம் வாக்காளரை நம்பி சுமார் 1300 வேட்பாளர் களத்தில் குதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

[க-9]

தண்ணீர்க் கட்டண விலை உயர்வை எதிர்த்து பொலீவியாவில் ஆர்ப்பாட்டம்

(பொலீவியா)

பொலீவியாவில் திடீரென உயர்வடைந்துள்ள தண்ணீர் கட்டணங்களை எதிர்த்து ஆயிரக் கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருவதாக தெரிய வருகிறது.

பொலிஸார் மீது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கற்களால் எறிந்து தாக்குதல் நடாத்தியதாகவும். இதனை முறியடிக்கும் செயலில், பொலிஸார் ஈடுபட்ட போது ஆசிரியர் ஒருவர் கொல்லப் பட்டதாகவும் ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மைக் காலம்வரை அமைதி நிலவி வந்த பொலீவியாவில் தற்போது நடந்து கொண்டிருப்பது பெரும் வன்முறைச் சம்பவம் என அரசியல் நோக்குநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை-

மேற்படி பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாதவிடத்து தாமும் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக போக்குவரத்துத்துறை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

(க-9)

இந்திய உள்விவகாரங்களில்

எந்த ஒரு அந்நிய நாடும் தலையிட அனுமதிக்கப்பட மாட்டாது

பிரதமர் வாஜ்பாய் தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்தியாவில் உள்விவகாரங்களில் எந்த ஒரு அந்நிய நாடும் தலையிட அனுமதிக்கப்பட மாட்டாது என பிரதமர் அடல்பிஹாரிவாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

ஜம்முகஷ்மீர் விவகாரம் தொடர்பாக புதுடில்லியில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்திய பாகிஸ்தானியா முறுகல் நிலையை தனது பதவிக்காலத்துள் எவ்வகையிலும் தீர்த்து வைக்க தனது பதவிக்காலத்துள் முழு அளவில் பாடுபடப் போவதாக அமெரிக்க ஜனாதிபதிபில் கிளிங்டன் தெரிவித்தற்கு பதில் கொடுக்கு முகமாகவே இந்தியப்பிரதமரின் மேற்படி உரை அமைந்திருந்ததாக சர்வதேச அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதே வேளையில் வரும் மார்ச் மாதம் அமெரிக்க அதிபர் பில் கிளிங்டன் தனது ஆசிய நாட்டு விஜயத்தின் ஓர் அங்கமாக இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளதும் அது தொடர்பாக பாதுகாப்பு ஏற்பாடுகள் விரிவான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதும் ஏற்கனவே தெரிந்ததே.

(க)

சப்ரகமுவ பல்கலையில் இடம்பெற்ற வர்த்தக,முகாமை பயிற்சிப் பட்டறை

(பதுளை)

இலங்கையின் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் அமைந்துள்ள வர்த்தக முகாமைத்துவபீடங்களின் பாடத்திட்ட சீர்திருத்தம் சம்பந்தமான பயிற்சிப்பட்டறை ஒன்று கடந்தமாத பிற்பகுதியில் சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

நாட்டின் தற்போதைய தேவை கருதி வர்த்தக முகாமைத்துவ கற்கை நெறிகளில் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதே இப்பயிற்சிப்பட்டறையின் நோக்கமாகும்.

பல்கலைக்கழக மாணவர்கள் ஆணைக்குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட இப் பயிற்சிப்பட்டறைக்கு இலங்கையில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களின் வர்த்தகமுகாமைத்துவபீடங்களின் பீடாதிபதிகளும், துறைத் தலைவர்களும் அழைக்கப் பட்டிருந்தனர். பல்கலைக் கழக மாணியங்கள் ஆணைக் குழுத்தலைவர், பேராசிரியர் திலகரத்தினா தலைமையில் இடம்பெற்றது.

இப் பயிற்சிப்பட்டறையில் நாட்டின் தேவைகருதி வர்த்தக முகாமைத்துவ கற்கை நெறிகளில் பல மாற்றங்களைப் புகுத்தவும், அடுத்த கல்வி ஆண்டில் இருந்து புதிய மாற்றத்தை நடைமுறைப் படுத்த வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக் கழகத்தின் சார்பில், முகாமைத்துவ வணிக பீடத்தின் பீடாதிபதி மா. நடராஜசுந்தரம், வணிகத்துறைத் தலைவர் க. தேவராசா ஆகியோர் இப்பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டனர். (க-வ)

இலவச ஆங்கில அகராதி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ஸ்ரீகணேசா மகாவித்தியாலயத்தில்கடந்த வியாழக்கிழமை ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இலவசமாக 25 ஆங்கில அகராதிப் புத்தகங்கள் வழங்கப் பட்டன.

மேற்படி மகாவித்தியாலய அதிபர் எஸ்.கே. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் இராதாகிருஷ்ணன் இப் புத்தகங்களை வழங்கினார்.

வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கச் செயலாளர் சி.முருகானந்தம் தனது தாயின் ஞாபகார்த்தமாக இப் புத்தகங்களை இலவசமாக வழங்கியிருந்தமைகுறிப்பிடத்தக்கது. (ந)

கசிப்பு உற்பத்திக்கு எதிராக சுவரொட்டிப் போராட்டம்

(கோப்பாய்)

உரும்பிராய் பகுதிகளில் கசிப்பு உற்பத்திக்கு எதிராக பொது அமைப்புகள் மற்றும் நலன் விரும்பிகள் சுவரொட்டிகளை ஒட்டி வருகின்றனர் என்றும்.

ஆனால் இச் சுவரொட்டிகளை கிழிப்பதுடன் அதன் மீது சேறு பூசல் நடவடிக்கையிலும் வேறு ஒரு கும்பல் ஈடுபட்டு வருவதாகவும்.

இவ் அடாவடித்தனம் குறித்து பொதுமக்கள் தரப்பில் பலத்த அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-79)

அச்சுவேலி பொது நூல் நிலையத்திற்கு புதிய நூல்கள் வழங்கப்பட்டுள்ளது

அச்சுவேலி பொது நூல் நிலையத்திற்கு சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான புதிய புத்தகங்கள் பிரதேச சபையினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

வாசகர்களின் நலன் கருதி நூல் நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ள இந்த நூல்கள் சரியான முறையில் தரம் பிரிக்கப்பட்ட பின்னர் வாசகர் பகுதிக்கு சேவையில் விடப்படவுள்ளது.

இத்தகைய நூல்களை வெளியில் எடுத்துச் சென்று வாசிக்க விரும்பும் வாசகர்கள் நூல் நிலையத்தின் நிரந்தர அங்கத்தவர் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பத்திலேயே அவர்களுக்கு நூல்களை வெளியில் எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படும் என்று அறிவித்துள்ள நூல்நிலைய வட்டாரத்தினர் தெரிவித்தனர். (க-14)

தென்மராட்சியில் திடீர் வேட்டை பெருமளவு கசிப்பு கைப்பற்றப்பட்டது

(நெல்லியடி)

மட்டுவில் தெற்கு,கச்சாய், கொடிகாமம், பளை, சாவகச்சேரி, சரசாலை மத்தி ஆகிய இடங்களில், தென்மராட்சி பிரதேச மதுவரி பொறுப்பதிகாரி றொகான் ராஜ் தலைமையில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் பெருமளவிலான கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திப் பொருட்கள் மீட்கப்பட்டன.

கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திப் பொருட்கள் வைத்திருந்ததாக கூறப்படும் நபர்கள் மீது சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு தண்டனை வழங்கப் பட்டது.

இதேவேளை-

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை பற்றிய தகவல்கள் தெரிந்தவர்கள் நேரடியாகவோ அல்லது கடிதமூலமாகவோ அன்றி தொலைபேசி மூலமாகவோ தமக்கு தெரியப்படுத்துமாறு தென்மராட்சிப் பிரதேச மதுவரிப் பொறுப்பதிகாரி றொகான் ராஜ் தெரிவித்துள்ளார்.

வேம்படிமகளிர் கல்லூரியில் எழுச்சிமிகு பரிசளிப்பு விழா

வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று முன் தினம் பரிசளிப்பு விழா அதிபர் திருமதி பொன்னம்பலம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ் விழாவிற்கு கல்வி உயர் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் தில்லை நடராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார்.

மு.ப10மணியளவில் இடம் பெற்ற இவ்விழாவில் யாழ். கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ராஜகோபால், முன்னாள் கல்விப் பணிப்பாளர் தணிகாசலம்பிள்ளை வைத்தியகலாநிதி செல்வி சின்னப்பா போன்றவர்களாக கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார்கள்.

மேற்படி விழாவில் மாணவிகளின் தமிழ்ப்பேச்சு, ஆங்கிலப் பேச்சு நன்றி உரை போன்ற நிகழ்வுகள் இடம் பெற்றன. (க-2)

காத்தவராயன் நாட்டுக்கூத்து

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம் நடாத்தும் காத்தவராயன் நாட்டுக் கூத்து போட்டி நேற்று 13ம் திகதியும் எதிர்வரும் 19ஆம் திகதியும் கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலையில் இடம்பெறுமென மேற்படி கழக செயலர் மெற்றாஸ் மெயில் தெரிவித்துள்ளார்.

நேற்று இந்நாடகம் மேற்படி பாடசாலையில் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (க)

புதிய கற்கைநெறி

(ஈச்சமோட்டை)

நாட்டில் சிறந்த கட்டட வியலாளரை உருவாக்கும் நோக்குடன் யாழ்ப்பாணத் தொழிநுட்பக் கல்லூரியில் பொறிக்கைப்பணித் தேசிய தராதரப் பத்திர கட்டடத் தொழிநுட்பம், எனும் புதிய கற்கை நெறி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (க-59)

பொதுக்கூட்டம்

(மந்திகை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட விவசாயிகள் அமைப்புக்களின் பொதுக் கூட்டம் நாளை 15ம்திகதி செவ்வாய்க் கிழமை பி.ப. 1.30 மணிக்கு செயலகமாநாட்டு மண்டபத்தில்நடைபெறும்என பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (க-23)

இன்று கிரிக்கெட் போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்றுவரும் 19 வயதிற்கு உட்பட்டோருக்கான துடுப்பாட்ட போட்டியில் இன்று 14ம்திகதி யாழ். மத்திய கல்லூரியை எதிர்த்து யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி மோத உள்ளது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இப் போட்டி இடம் பெறஉள்ளது. [க-2]

விவாக பதிவாளர் நியமனம்

(தென்மராட்சி)

அச்சுவேலியைச் சேர்ந்த திருமதி கௌரிமதனசேகர் வலிகிழக்கு பிரதேசத்துக்கான விவாக பதிவாளராகவும்— அச்சுவேலிப் பகுதிக்கான பிறப்புஇறப்பு பதிவாளராகவும் இம்பாதம் முதலாம் திகதி முதல் மாவட்ட பதிவாளர் நாயகம் எஸ்.சதாசிவஐயரால் நியமிக்கப் பட்டுள்ளார். [க-77]

செய்தித் துளிகள்

வாகனம் அனுப்பி வைப்பு

(புலோலி)

யாழ். பிராந்திய உள்ளூராட்சி திணைக்களத்திற்கு வடக்கு-கிழக்கு மாகாண சபை வாகனம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. இவ் வாகனம் அனுப்பி வைக்கப் பட்டதையடுத்து உள்ளூராட்சித் திணைக்களத்தின் செயற்பாடுகள் இலகுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-52)

மலசலகூடம் அமைப்பு

(அச்சுவேலி)

அத்தியார் இந்துக்கல்லூரியில் மலசலகூடத்தொகுதி அமைக்கப்பட்டு வருவதாக கல்லூரி அதிபர் எஸ். விசுவலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன அனுசரணையுடன் சுமார் 05 இலட்சம் ரூபா செலவில் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர்மேலும் தெரிவித்தார். (க-57)

சங்கானையில் தொடரும் திருட்டுக்கள்

(இளவாலை)

சங்கானைப் பகுதியில் திருடர்களின் தொல்லை வெகுவாக அதிகரிக்கப்பட்டு வருவதாக பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப் படுகிறது.

அண்மையில் இரவு வேளையில் வரதாஸ் கிறீம் உரிமையாளரின் மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

இதே வேளை சங்கானை வைத்தியசாலைக்கு அண்மையிலும் துவிச்சக்கர வண்டி ஒன்றும் களவாடப் பட்டுள்ளது.

இதற்கு முன் நான்கு துவிச்சக்கர வண்டிகள் இப்பகுதியில் களவாடப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-12)

இடம் மாற்றம்

புத்தூர்மேற்கு கிராம சேவகராக கடமையாற்றிய என். செல்லத்துரை, அச்சுவேலிமேற்கு கிராம சேவகர் பகுதிக்கு மாற்றம் செய்யப் பட்டுள்ளார்

அச்சுவேலிமேற்கில் கடமை புரிந்த எஸ். மதனசேகர் புத்தூர்மேற்கு பகுதிக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்தமாதம் முதல் இவ் இடமாற்றம் மேற்கொள்ளப் பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-19)

விண்ணப்பம் கோரல்

தேசிய அபிவிருத்தி நிறுவனத்தினால் நடாத்தப்படும் சமூகப்பணி டிப்ளோமா பாடநெறி 2000/2002 ஆண்டுகளுக்கான விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

இப் பாடநெறிக்கான மாதிரி விண்ணப்பப் படிவம் கடந்த 21 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரமாகி உள்ளன.

பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பதிவுத்தபாலில் பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம், இல 191 தர்ம பால மாவத்த, கொழும்பு 7, என்னும் முகவரிக்கு இம்மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப் படல் வேண்டுமென தெரிவிக்கப் பட்டுள்ளது. (க-02)

புனரமைப்பு

(அச்சுவேலி)

சிறுப்பிட்டி தெற்கு காளையம்புலம் இந்து மயானமும் அதன்பாவனைக்கான கிணறு ஒன்றும், இப்பகுதி கலையொளி சனசமூக நிலையப் பகுதி மக்களின் சிரமதானப் பணியின் மூலம் புனரமைக்கப்பட்டுள்ளது.

இதற்காக ஈ.பி.டி.பியின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 15 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (க-57)

கசிப்பு பறிமுதல்

(அச்சுவேலி)

நீர்வேலி, சிறுப்பிட்டி, தெற்கு, சுன்னாகம் வீதி புத்தூர் ஆகிய இடங்களை பொலிஸார் மேற்கொண்ட திடீர் வேட்டையின்போது பெருமளவு கசிப்பு வெளியில் ஊற்றப்பட்டதுடன் கசிப்பு காய்ச்சும் பரல்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சிறுபிட்டிதெற்கில் 15லீற்றர் கசிப்பும் நீர்வேலிப்பகுதியில் 50லீற்றரும் சுன்னாகம்வீதி புத்தூரில் 25லீற்றரும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (க-57)

மயங்கிவீழ்ந்தவர் மரணம்

இலங்கை வங்கி யாழ்.கிளையில் அதன் வாடிக்கையாளர் ஒருவர் மயக்கமுற்று வீழ்ந்து மரணித்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை மதியமளவில் இடம் பெற்றது.

விக்னேஸ்வரா லேன், அச்சுவேலி தெற்கை முகவரியாகக் கொண்ட நாகநாதன் இராசா (வயது 66) என்பவரே மேற்படி சம்பவத்தில் மரணமடைந்தவர் என்று அறியப்பட்டுள்ளது. (க-78)

புதியமுறையில் ஓடு திருட்டு

(கோப்பாய்)

கோப்பாய் பகுதிகளில் கவனிப்பாரற்ற நிலையில் உள்ள வீடுகளில் ஓடுகள் திருடப்படுவதுடன் அவை பாதுகாப்பாக ரி.வி.டெக் பெட்டிகளில் பார்ப்பவர் கண்ணுக்கு புலனாகாத வாறு கொண்டு செல்லப்படுவதாக புகார் தெரிவிக்கப் படுகிறது. (க-79)

உரிமைத் தகடுகள் வழங்கல்

(அச்சுவேலி)

2000 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கர வண்டி உரிமத் தகடுகள் அச்சுவேலி பிரதேச சபை உப அலுவலகத்தில் வழங்கப்பட்டு வருகின்றது.

அனைத்து துவிச்சக்கர வண்டி உரிமையாளர்களையும் இதனைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேசசபை வட்டாரத்தினர் அறிவித்துள்ளனர். (க-14)

வடமராட்சியில் கலாசார மண்டபம்

(மந்திகை)

வடமராட்சியில் பத்து இலட்சம் ரூபா செலவில் கலாசார மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

வல்லிபுர குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரின் அனுசரணையுடன் இம் மண்டபம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. (க-23)

மலர்மிசை ஏகினான்
மாணடி சேர்ந்தார்.
நிலமிசை நீடு வாழ்வார்.
- குறள்

வலம்புரி

அன்னையின் அருள்

மணிபல்லவத்தே மாத ரசியாக வீற்றிருப்பவள் உலக மாதா ஸ்ரீ நாக பூசணி. அவளது கடைக் கண் பார்வை மானிடம் கடைத்தேற வழிசமைக் கும். பிறந்துள்ள இரண் டாயிரமாம் ஆண்டில் லோக சேமத்தை முன் னிட்டும் அனைத்து மக் களின் நலன்களை வேண் டியும் எங்கும் சாந்தியும் சமாதானமும் நிலவி, அன் பும் அருளும் அமைதியும் நிலைக்கவும் நிகழ்ந்த லட்சார்ச் சனையுடன் கூடிய மஹாயாகத்தை இங்கு விதந்து போற்றா திருக்க முடியாது.

அறுபத்தி நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாகிய நயினை ஸ்ரீ நாகபூஷணி தமிழர்தம் தகவுடைத் தாய்: அவர்தம் நயனம். தனக்கொருவர் ஒப்பில் லாத் தாய் இந்தத்தரணி தனில் சாந்தியினைத் தரு வாள் என்ற திடசிந்தை நம் மனோர்க்காகுக.

அலைகடல் மத்தியில் அருந்தமிழ் மண்ணில் அங்கையர்க்கண்ணி வீற் றிருப்பது சாந்தியும் சமா தானமும் வேண்டிப் போலும். வேற்றுமையில் ஒற்றுமைகாண அபய மளிக்கும் கரத்தளாய்- ஆறுதல் நல்கும் அகத் தளாய் அம்மை தரும் திருக்காட்சி பிறவிப் பேறே.

காப்பியங்கண்ட நேமி யில் அமுதசுரபிபோல் அருள் தரும் அம்மை எமக்கு ஆறுதல் நல்கு வாள்; நல்க வேண்டும்- தாயின் அன்புக்கு ஈடு இணையாக எதுவுமில்லை கையறு நிலையில் கண் ணீர் மல்கும், கலுழ்ந் துருகும் மக்கள் வெள்ளம் அமைதிகாண்பது என்பது இறையருளாலேயாம்.

ஆன்மா லயப்படும் இடம் ஆலயம்- அமைதி வேண்டுபவர்க்கு அத னைச் சுரக்கும் திருவிட மது. கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம் என்றே ஆன்றோர் கூறி னர்- தூய வெண்ணீறு துதைந்த மேனியும் சிவ னடி மறவாச்சிந்தையும் கைவரப் பெற்றவர் கவ லைகள் அற்றவர்- வாழ் வியல் துன்பம் மட்டு மன்றி பிறவித்துயரையும் போக்க வல்லது இறை வனை அடைதலே-அந்த வகைக்கு அறவாழி அந் தணன்தான் சேர்தல்மனி தம் தழைக்க மாமருந் தாகும்.

- அன்புடன் ஆசிரியர்

உத்தியோக ஏற்றத் தாழ்வுகள் சமூகத்தில் பாதிப்பை ஏற்படுத்தும்

- பேராசிரியர் சண்முகதாஸ் தெரிவிப்பு

[தென்மராட்சி]

எமது சமூகத்திலே சில தொழில்களுக்கு நாம் அள வுக்கதிகமான முக்கியத்துவம் கொடுத்து வருகிறோம். இதற்கு உடந்தையாக அர சாங்கமும் உத்தியோகங் களில் ஏற்றத் தாழ்வினை நெடுங்காலமாகக் கற்பித்து வந்துள்ளது. அரசு வகுத் தமைத்த சம்பள அடிப்படை யும் இத்தகைய தாழ்வினைக் கூர்மைப்படுத்தி வந்துள்ளது. ஓர் அலுவலிலே ஆசிரியர், மருத்துவர், பொறியிய லாளர் வங்கியாளர் என் போர் இருக்கின்ற போது இவர்கள் எல்லோரும் சரி நிகர் சமானமாக எம்முடைய சமூகத்திலே கொள்ளப்படு கின்றார்கள் என்று கூற முடி யாது. நான்கு வகையான தொழில் பார்ப்பவர்களை நாம் பிரித்தே, எம்மவர் பார்த்து வந்துள்ளனர். நால் வருமே சமூகத்துக்குச் சேவை செய்பவர்கள். நான்கு வகை யான தொழில்களிலே ஈடு படுபவர்கள் என்று நாம் கருதியதே இல்லை.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டப் பின் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதியாகிய பேரா சிரியர் கலாநிதி அ. சண்முக தாஸ் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற தாபகர் தின வைபவத்தில் நினைவுப் பேருரை நிகழ்த் துகையில் குறிப்பிட்டார்.

கல்லூரியின் அதிபர் திரு. க. சந்திரசேகரா தலைமை யில் நடைபெற்ற இவ்வை பவத்தில் ''தமோதரன்'' எனும் பெயரில் கல்லூரி மலர் வெளியிட்டு வைக்கப் பட்டது. இம்மலரை தென் மராட்சி கல்வி வலயத்தின் கோட்டக்கல்வி அதிகாரி எஸ். சத்தியநாதன் வெளியிட்டுவைத்தார்.

பேராசிரியர் சண்முகதாஸ் அங்கு தொடர்ந்து உரை யாற்றும்போது.

சிறுவயதில் இருந்தே மருத் துவர், பொறியியலாளர் கனவு எம்முடைய சிறார்கள் மனத்திலே ஊட்டப்படுகின் றது. க.பொ.த. சாதாரண தரத் தேர்வு சித்தியடைந்த வுடன் இக் கனவை நனவாக் கும் முயற்சி அதிதீவிரப் படுத்தப்படுகின்றது. பெரும் பாலான மாணவர்கள் பல் கலைக்கழகம் செல்ல வேண் டும் என்றும் ஒரே நோக் குடனும் ஆவலுடனும் விஞ் ஞானப் பாடங்களைத் தேர்ந்தெடுக்கின்றார்கள். பல்கலைக்கழகம் செல்லாமல் தொழில் நுட்பக் கல்லூரி யிலோ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலோ சேர்ந்து படித்தால் சம்பளக் குறை வும், கௌரவக் குறைவும் உண்டு என்று எம்முடைய மாணவர்களுக்குத் தெரியும்.

எனவே அளவுக்கதிகமா னோர் குறிப்பிட்ட துறை யிலே படிக்க நினைத்தால் அங்கு அளவுக்கு அதிகமான போட்டி ஏற்படுவதுஇயல்பே.

அத்துடன் அரசு இன அடிப் படையிலே கொண்டு வந்த மனிதாபிமானமற்ற கரப் படுத்தல் முறை எம்முடைய தமிழ் மாணவர்களை அசுரப் போட்டியினை எதிர் நோக் கும்படி வைத்தது. இப் போட்டிக்குத் தீனி போடு வதற்கு எம்முடைய கல்லூரி களுக்குள் ஆசிரியர்களாலேயே முடியவில்லை. பல தனியார் நிறுவனங்கள் இப்பசிக்குத் தீனி இடத் தொடங்கின எனக் குறிப்பிட்டார்.

(க-77)

வேலணை வங்களாவடியில் விரைவில் புதிய தும்புத்தொழிற்சாலை

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்தி சபை யின் நிதி உதவியுடன் வங் களாவடி, வேலணையில் தும்புத்தொழிற்சாலை ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

தொழிற்சாலைக்கு வேண் டிய இயந்திர இணைப்பு களும் மேலும் அடிப்படை வசதிகளும் பூர்த்தி செய்யப் பட்டுவருவதாகவும் இன்னும் இரு வாரங்களில் தொழிற் சாலை திறந்து வைக்கப்படு மென்றும் பனை அபிவிருத்தி சபை உத்தியோகஸ்தர் ஒருவர் செய்தி வெளி யிட்டார். (க-2)

ஊர்காவற்றுறையில் வைத்திய அதிகாரி 4 வருடமாக நியமிக்கப்படவில்லை

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்கு மாவட்ட வைத்திய அதிகாரி இதுவரை நியமிக்கப்படாததனால் இப் பகுதிநோயாளர்கள் பெரிதும் அவதியுறுவதாக புகார்தெரி விக்கப்படுகின்றது.

இதேவேளையில் இந்த வைத்திசாலையில் கடந்த நான்கு வருடகாலமாக இப் பதவி வெற்றிடமாக இருப் பதும் குறிப்பிடத்தக்கது.

(க-75)

சனசமூக நிலைய திறப்புவிழா

(அச்சுவேலி)

அண்மையில் புனர் நிர்மா ணம் செய்யப்பட்ட கோப் பாய் தெற்கு சூரியோதய சனசமூக நிலையம் மீண்டும் நேற்று முன்தினம் முதல் மக்கள் பாவனைக்காக திறந் துவைக்கப்பட்டுள்ளது.

இந்த திறப்புவிழா வைப த்தில் கௌரவவிருந்தினராக ஈ.பி.டி.பி கோப்பாய் அமைப்பாளர் ஏ.ரவி மற்றும் சிறப்பு விருந்தினராக செஞ் சிலுவைச்சங்க கோப்பாய் பிரிவு தலைவர் வை.தியாக ராஜா ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (க-14)

புலிகள் தரப்பில் ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

விளக்குவைத்த குளம்பகுதி யில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இராணுவத்தினருட னான மோதலில் வீரவேங்கை தமிழரசு. இளம்குயில்.

(நடராஜர் ஜெகதீஸ்வரன் முல்லைத்தீவு) என்றபோராளி உயிரிழந்ததாக புலிகள் தரப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந)

குடும்பஸ்தர் ஈ.பி.டி.பியில் இணைவு வடமராட்சியில் சம்பவம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சிப் பகுதியில், கடந்த 8 ஆம் திகதி முதல் காணாமற் போனதாக கருதப்பட்ட குடும்பஸ்தர், வடமராட்சியில் உள்ள ஈ.பி. டி.பி. அலுவலகத்தில் இணைந்திருப்பதாக தெரிய வருகிறது.

நவரட்ணம் ரவீச்சந்திரன் (30 வயது) அல்வாய் வடக்கு அல்வாய் என்ற 4 பிள்ளை களின் தந்தையே இவ்வாறு இணைந்தவராவார்.

தனது சுய விருப்பத்தின் பேரில், யாருடைய வற்புறுத் தலும் இன்றி மக்கள்சேவை செய்யும் பொருட்டே ஈ.பி. டி.பி. அமைப்பில் தன்னை இனைத்துக் கொண்டதாக மேற்படி குடும்பஸ்தர் தெரி வித்துள்ளார் (க-43)

நெடுந்தீவில் கோஷ்டிமோதல் இளைஞர் ஒருவர் படுகாயம்

இரு இளைஞர் அணியினருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறி கோஷ்டி மோதலாக உருவெடுத்த சம்பவம் நெடுந் தீவு 6ம் வட்டாரத்தில் யாகப்பர் தேவாலயத்திற்கு அருகில் இடம் பெற்றது.

டக்ளஸ் ஜெகநாதன் (வயது 22) காயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார்.

ஏனையவர்கள் சிறு சிறு காயங்களுடன் தப்பி ஓடி விட்டனர். (க-57)

மென்பந்து கிரிக்கெட் போட்டி

(மந்திகை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப் பட்ட கழகங்களுக் கிடையி லான மென்பந்து கிரிக்கெட் போட்டி நேற்று 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குதிக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதா னத்தில்ஆரம்பமாகியது.

மட்டுப்படுத்தப்பட்ட ஐந்து ஓவர் கொண்ட ஆறு பேர் பங்கு பற்றும் ஆட்டத்தில் பத்திற்கு மேற்பட்ட கழகங் கள் பங்குபற்றுகின்றன.

(க)

குழாய்கள் பொருத்தும் வேலை பூர்த்தி

(ஊர்காவற்றுறை)

காரைநகர் ஊரி கிராமத் தில் மக்களுக்கு குழாய்மூலம் குடிநீர் வழங்குவதற்கான குழாய்கள் பொருத்தும் வேலைகள் முடிவடைந்துள் ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்செயற்பாட்டினை யு. என எச்.சீ.ஆர். நிறுவனத் தின் 5லட்சம்ரூபா நிதியுதவி யுடன், கிராமமக்களின் உதவியுடனும் இவ்வேலை செய்து முடிக்கப் பட்டுள்ள தாகவும், இம்மாத இறுதிப் பகுதிக்குள் குடிநீர் விநியோ கம் ஆரம்பிக்கப்படவுள்ளதா கவும் தெரிவிக்கப்படுகிறது.

(க-75)

கட்டடம் அமைக்கும்பணி தொடர்கிறது

(வரணி)

யாழ். இயற்றாலை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் புதிய வகுப் பறைக் கட்டிடம் அமைக் கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆரம்பப் பிரிவினை மட் டுமே கொண்டு இயங்கும் இப்பாடசாலையை விரிவு படுத்தும் நோக்கமாகவே புதிய கட்டிடங்கள்அமைக்கப் பட்டு வருவதாக தெரியவரு கிறது. (க-28)

வீட்டு மின்னிணைப்பு, மற்றும்தொழில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(வட்டுக்கோட்டை)

வலி மேற்கில் கைத் தொழில் பயிற்சி அதிகார சபையினால் நடாத்தப்பட விருக்கும், வீட்டு மின்சுற்றும் மின்கம்பி இணைப்பும் மேசன் தொழில், தச்சுத் தொழில் ஆகிய கற்கைநெறி களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

9-ஆம் ஆண்டு வரை கல்வி கற்ற மேற்படி பயிற்சி நெறி களுக்கு விண்ணப்பிக்க விரும் புவோர் அராலி வடக்கு J/164 கிராம சேவையாள ருடன் தொடர்பு கொள்ளு மாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை—

மக்கள் கடை திறந்து வைப்பு

(புலோலி)

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் புலோலி இணவொல்லைப் பகுதியில் புதிய மக்கள் கடை ஒன்றைத் திறந்து வைத்துள்ளது.

அக்கிராம மக்களின் நன்மை கருதித் திறந்து வைக்க மக்கள் கடையை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைத் தலைவர். கே. அருமைத்துரை சம்பிரதாயபூர் வமாக நடாவை வெட்டித் திறந்து விற்பனையையும் ஆரம்பித்து வைத்தார்.

இப்பயிற்சிக் காலத்தின் போது மாதாந்தப் படியாக 450 ரூபாவும் பயிற்சி முடி வில் சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழும் வழங் கப்படவுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

(க-24)

விளையாட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வை.எம். சி.ஏ. மண்டபத்தில் கரம் பூப்பந்தாட்ட விளையாட்டுப் போட்டிகள் இடம் பெற்று வருகின்றன.

மதிவதனன் 5-ம் ஆண்டு நினைவை ஒட்டி இடம் பெறும் இப்போட்டிகள் எதிர் வரும் 16-ம் திகதிவரை நடைபெற உள்ளதாக விளை யாட்டு அமைப்பாளர் மணிக் குரல் சற்குணம் தெரிவித்துள் ளார். (க-2)

இன்றைய சிந்தனை

நிலை மாறும் போது தான் எமது நிதானத்தை தவறவிடக்கூடாது. ஏனெ னில் நிதானம் என்பது தான் எமது நிஜங்களின் பிரதி பலிப்பு.

--(யாழ். பல்கலைக்கழக ஆய்வரங்கு)--

யுத்தம் நடந்து கொண்டிருந்தாலும் அபிவிருத்திக்கானதிட்டமிடல்தேவை

பேராசிரியர் மைக்கல் லியோன் லிவ் கருத்து

(தென்மராட்சி)

யுத்தத்தின் அகோரப்பிடியில் சிக்குண்டுள்ள யாழ்ப்பாணப் பிரதேசத்தினை புதிய நூற்றாண்டில் திட்டமிட்ட முறையில் புனரமைப்பு மீள் அபிவிருத்தி செய்வதற்கான அடிப்படைத் திட்டமிடல் நடவடிக்கைகள் இப்போதே செய்யப்படல் வேண்டும். சமாதானம் ஏற்பட்ட பின்னர்தான் புனரமைப்பு, மீள் அபிவிருத்தி பற்றி நாம் சிந்திக்க வேண்டும் என்ற நிலைப்பாடு ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. எனவே யாழ்ப்பாணப் பிரதேசத்தினை அபிவிருத்தி செய்து மக்களை நிம்மதியாக வாழச் செய்ய வேண்டிய பொறுப்பும் கடமையும் இங்குள்ள யாவருக்கும் உண்டு. சர்வதேச நீதியில் யுத்தத்தின் கெடுபிடிகளில் மூழ்கியிருந்த யப்பான், இத்தாலி, ஜேர்மனி வியட்நாம் போன்ற மீள்நாடுகளிலும்புனரமைப்பு அபிவிருத்திக்கான திட்டமிடல் பணிகள் இவ்வாறே இடம்பெற்றன. அவற்றின் அடிப்படையிலேயே வடஇலங்கைக்கான புனரமைப்பு மீள் அபிவிருத்தி பற்றிய திட்டமிடல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறு கனடாவிலுள்ள பிரிட்டிஸ் கொலம்பியா பல்கலைக் கழகத்தின் மனிதகுடியிருப்புக்கள் நிலையத்தின் பிரமுகரான இணைப் பேராசிரியர் கலாநிதி மைக்கல் லியோன் லீவ் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை மண்டபத்தில் நேற்று நடைபெற்ற ஆய்வரங்கின் போது தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ். பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற மாலை நிகழ்வில் கலாநிதி மைக்கேல் லியோன் லீவ் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் யாழ்ப்பாண நகரத்தின் நீண்ட கால புனரமைப்பு மீள் அபிருத்தியைச் கருத்தில் கொண்டு புனரமைப்பு மீள் அபிவிருத்தித் செயற்பாடும், நல்ல திட்டமிடலும் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன் இத்தகைய பணிகளில் யாழ்ப் பாணப்பிரதேச மக்கள் உண்மையாகப் பங்கேற்கக் கூடிய வழிவகைகளும் செய்யப் படல் வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தின் நிகழ் கால எதிர்காலக் கைத்தொழில் அபிவிருத்தி பற்றி ஆய்வரங்கில் பொறியியலாளர் எம். இராமதாசன் உரையாற்றுகையில்:

இங்கு கைத்தொழில் அபிவிருத்தி முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதற்கு நடைமுறையில் இருக்கும் தடைகள் நீக்கப்படல் வேண்டும். புத்தாயிரம் ஆண்டில் புதிய நோக்குகளுடனும் சிந்தனைகளுடனும் அபிவிருத்திக்கான திட்டங்கள் வரையப்படல் வேண்டும். அத்துடன் மக்கள் மத்தியில் மன மாற்றம் ஏற்படல் வேண்டும். யாழ்ப் பாணப் பல்கலைக் கழகத்தில் அபிவிருத்திக் கல்வி ஆரம்பிக்கப்படல் வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

மேலும் கலாநிதி ஏ. எஸ். சூசை யாழ். குடாநாட்டில் மீன்பிடித்துறை பற்றியும் திருமதி என். தர்மசீலன் தொழில்துறை வளர்ச்சிபற்றியும் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்து உரையாற்றினர்.

நேற்றைய ஆய்வரங்கில் யாழ். மாவட்ட அரச அதிபர் திரு. க. சண்முகநாதனும் பங்குபற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்காகும். (ந-77)

புலிகள் - அரசபடைகள் மோதல் பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு!

(கொழும்பு)

கந்தளாய் கோவிலடி வீதி சோதனைச்சாவடி மீது விடுதலைப்புலிகள்மேற்கொண்ட தாக்குதலில் இரண்டுபொலிஸாரும் ஒரு பொதுமகனும் காயமடைந்ததாகவும், பொலநறுவை பகுதியில் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பொலிஸார் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை மகாவில். தங்களப்பு கந்தார் கலையரேகம் ஆகிய பகுதிகளில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 10புலிகள் கொல்லப்பட்டதாகவும் படையினர் தரப்பில் ஒருவர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் மேலும் அறிவித்துள்ளது. (வ-4)

அரசியல்-:-

ஐக்கிய முன்னணி செயலரும் விவசாய காணி வள அமைச்சருமான டி. எம். ஜெயரத்தின தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் புதியஅரசியல் சீர்திருத்த சட்டமூலம் தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சியுடன் மார்ச்மாதம் 1ம் வாரத்தில் பேச்சுகள் நடத்தவிருப்பதாகவும், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்திற்கு நோர்வேயைக் கோருவதென்று அரசு இதுவரை முடிவு செய்யவில்லை என்றும், நோர்வே வெளிவிவகார அமைச்சர் இங்குள்ள நிலமையை அறியவே புதன்கிழமை வரவிருப்பதாகவும் கூறினார் [வ]

பிரதியமைச்சரின். . .

இவ்விபத்து தொடர்பாக பஜிரோவை ஓட்டிவந்த சாரதி பொலிஸாரிடம் சரண் அடைந்துள்ளார். வெள்ளவத்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் (வ

ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
பிரசாந், ரியாசென்
நடித்த
குட்லக்
(புதிய வெளியீடு)
10. 30, 2. 30 (ப.நே)
வெட்டுப்படாத
முழுமையான நேரடி
CD யில் காண்பிக்கப்படும்
மகளிருக்கு இடமுண்டு
(00115)

பெற்ற---

35 வயதான புவனேஸ்வரி என்ற இளம் பெண்ணே பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளவராவார்,

பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட புவனேஸ்வரி என்ற பெண் நேற்றுப் பிற்பகல் வவுனியா மாவட்ட பதில் நீதவான் வி. சிற்றம்பலம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது எதிர் வரும் 25ம் திகதிவரை அவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ 103)

அனலைதீவு---

இறங்குதுறையை போக்குவரத்துப் பாவனைக்கு அனுமதிக்குமாறு கோரி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க. மணிபல்லவராஜன் காரைநகர் கடற்படையின் கட்டளை அதிகாரியுடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தே இவ்வனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த இறங்குதுறையை புனரமைப்பதற்கு தேவையான நிதியை ஈ. பி; டி. பியின் செயலாளர் நாயகமும், யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா 'ரான்' அமைப்பினூடாக ஒதுக்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது, [ந[

தமிழர்...

யும் ரெலோவும் எதிர்த்து வாக்களிக்க தீர்மானித்துள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் எம். பி. பிரதி நிதியமைச்சர் பீரிஸினால் சமர்ப்பிக்கப்பட விருக்கும் வரவு செலவுத்திட்டத்தில் நாட்டின் பாதுகாப்புக்கு கூடியளவு பணம் ஒதுக்கப்பட்டிருப்பதனால் இவ் வரவு செலவுத் திட்டத்தை தமிழர்விடுதலைக் கூட்டணி எதிர்க்கும் என்றும் இதே காரணத்திற்காக ரெலோ அமைப்பும் எதிர்க்குமென செல்வம் அடைக்கலநாதன் எம். பி. தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டம் இன்று காலை 9. 00 மணிக்கு பிரதி நிதியமைச்சர் ஜி. எல். பீரிஸினால் சமர்ப்பிக்கப்பட இருப்பது [illegible] (வ)

பதினைந்து---

அரசு தம்மை விடுவிக்க பொருத்தமான நடவடிக்கை எடுக்கும் வரை இந்த உண்ணாவிரதப் போராட்டம் தொடருமென யுத்தக் கைதிகளாகவுள்ள படைவீரர்கள் அறிவித்துள்ளார்கள் என வன்னித்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருகடற்படை வீரர்களும் 13 இராணுவத்தினரும் இந்த சாகும் வரையான உண்ணாவிரதப் போரட்டத்தில் இறங்கி உள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (வ103

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;

வவுனியா - கொழும்பு லொறி சேவை

அத்தியாவசிய பொருட்கள் ஏற்றிச் செல்ல நண்பகலுக்கு பின் அனுமதி மறுப்பு!

(வவுனியா)

வவுனியாவில் இருந்து கொழும்புக்கு அத்தியாவசிய பொருட்களை ஏற்றிக் கொண்டு செல்லவிருந்த லொறிகளை நேற்று பி. பகல் 3. 30 க்குப்பின் ஈரப்பெரியகுளம் சோதனைச்சாவடியை தாண்டிச்செல்ல படையினர் அனுமதி வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக வவுனியா வர்த்தகர்கள் வவுனியா வர்த்தக சங்கத்தினரிடம் புகார் செய்துள்ளனர்.

வவுனியாவில் இருந்து தினமும் கொழும்புக்கு அரிசி மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு 30 லொறிகள் சென்று வருகின்றன. இந்த லொறிகள் கடந்த காலங்களில் பி. ப 5 மணி வரை ஈரப்பெரியகுளம் சோதனைச் சாவடியில் வைத்து செல்வதற்கு வழமையாக அனுமதி வழங்கப்பட்டு வந்தன.

நேற்று முதல் புதிய நடைமுறையை பாதுகாப்புப் படையினர் நடைமுறைப் படுத்தி வருவதினால் வவுனியாவுக்கும் கொழும்புக்கு இடையிலான பொருட்களை ஏற்றிச் செல்லும் தனியார் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா வர்த்தக சங்கத்தினர் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் இன்றுதொடர்பு கொண்டு பேசவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (வ-103)

யாழ். பல். மருத்துவபீட மாணவன்

சடலம் பிரேத பரிசோதனையின் பின் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது

[யாழ்ப்பாணம்]

யாழ். மருத்துவ பீட முதலாம் வருட மாணவன் ரவீந்திரன் சுரேஷ்குமாரின் மரணம் தொடர்பாக நேற்றுக் காலை 11 மணிக்கு யாழ். போதனா வைத்திய சாலையில் பிரேத பரிசோதனை நடைபெற்றது,

பிரேத பரிசோதனையை சட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சிறிரா ஜேஸ்வரன் மேற்கொண்டிருந்தார்.

யாழ். மாவட்ட நீதிபதி இ. த. விக்கினராசாவின் உத்தரவின்பேரில் இடம் பெற்ற பிரேத பரிசோதனையின்பின் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனை அறிக்கையும், சாட்சிகளின் அறிக்கையும் இன்று நீதிமன்றில் யாழ். மாவட்ட நீதிபதி இ. தி விக்கினராஜாவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (வ]

புளொட் அமைப்பின் முயற்சியால் கைதுசெய்யப்பட்ட இளைஞன் விடுதலை

கடந்த எட்டாம் திகதி யாழ்நகரப் பகுதியில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட சுந்தர்மடம் பழம் வீதியைச் சேர்ந்த நவரெட்ணம் தேவநேசன்நேற்று விடுதலை செய்யப்பட்டார். இவரின் கைது குறித்து பெற்றோர் புளொட் அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் கே. ரஞ்சனுக்கு அறிவித்ததைத் தொடர்ந்து அவர் இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு விடுதலைக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். இவரின் நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்படி நபர் நேற்றுப் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ந)

கொட்டடியில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

கொட்டடி மீன் சந்தையில் மீன் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பூலோகசிங்கம் செல்வகிருஷ்ணன் (29 வயது) என்ற இளைஞன் நேற்று இராணுவத்தால் கைது செய்யப்பட்டார்.

இவரது கைது தொடர்பாக அவரின் மனைவி செ. சுஜாதா ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் முறையிட்டுள்ளார். (ந)

நோர்வே...

சகர் அன்ரன் பாலசிங்கம் நோர்வே வெளிவிவகார அமைச்சர் கெனட் வொலி பேர்க்கிடம் இனப்பிரச்சினைத்தீர்வு சம்பந்தமாகத் தமிழீழவிடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டையும், உறுதிப் பாட்டையும் விளக்கிக் கூறியதாக லண்டனில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகளின் கருத்துக்களை அன்ரன் பாலசிங்கத்திடமிருந்து அறிந்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் இலங்கை வந்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவையும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவையும் சந்தித்து இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும்.

அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு அடித்தளம் இடப்படலாம்என்றும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்கும் நோர்வே வெளிவிவகார அமைச்சருக்குமிடையே இடம்பெற்றபேச்சுவார்த்தை தொடர்பான விவரம் எதுவும் இருதரப்பாலும் இதுவரை வெளியிடப்படவில்லை; (வ)

தையல் பயிற்சி இன்று ஆரம்பம்

(மானிப்பாய்)

வடக்குக் கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலி. தென். மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நடாத்தப்படும் இரண்டாயிரமாம் ஆண்டிற்கான தையல் டிப்ளோமா பயிற்சிநெறி இன்று திங்கள் காலை 9 மணிக்கு பண்டத்தரிப்பு உபதபாலகத்திற்கு அருகாமையிலுள்ள கட்டடத்தில் ஆரம்பமாகவுள்ளது.

உடுவிலில்...

திருமதி செல்வநாயகம் என்பவரே பலியாகியுள்ளார். அவரது மகனான செல்வநாயகம் குமார் [வயது 16] ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [வ, 78]